**STC .No. 2089/2024**
**நாள் – 24.02.2026.**

பு.**சா.1 – திரு. செந்தில் குமார் சாட்சி சத்தியப்பிரமாணத்தின் மூலம் அழைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை )**

**(எதிரி ஆஜர்).**

எதிரியை கடந்த 2023 முதல் நண்பர் சக்திவேல் என்பவர் மூலம் தெரியும். மேற்படி விவரத்தை புகார் மற்றும் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக அறிமுகப்படுத்தினார் என்றால் காரணம் எதுவும் இல்லை. புகாரில் சொல்லியுள்ள முகவரியை தவிற எதிரியின் வேறு முகவரிகள் எனக்கு தெரியாது. எதிரியின் கணவர் பெயர் கார்த்தி. மேற்படி விவரத்தை புகார் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு மதுரை மாவட்டம் கரிமேடு பகுதியில் சொந்த வீட்டு முகவரி உள்ளது என்றால் அது பணம் கொடுக்கும் சமயத்தில் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் எதிரிக்கும் இந்த பரிவர்த்தனை தவிற வேறு பரிவர்த்தனைகள் இல்லை என்றால் சரிதான். நான் ரமோரா கிராண்ட் ஹோட்டலில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். மேற்படி ஹோட்டலில் தான் சக்திவேல் என்பரும் மேலாளராக வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்பதை புகார் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த பரிவர்த்தனை தான் முதல் பரிவர்த்தனை என்றால் சரியல்ல. முன்னதாக ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம் என கொடுத்து வாங்கியது உண்டு. எதிரி என்ன படித்துள்ளார் என்றால் தெரியாது. நான் பணம் கொடுக்கும் சமயம் எதிரியின் கணவர் டீ கடையில் மாஸ்டராக வேலை பார்த்து வந்தார். தற்போது தெரியாது. எதிரிக்கு கடன் கொடுக்கும் போது அவரது கணவருக்கு தெரிவித்தேனா என்றால் இல்லை பணம் கொடுக்கும் சமயத்திலும் அவர் இல்லை. எதிரி எந்த தேவைக்காக பணத்தை கேட்டார் என்றால் சில்லரை கடன்களை தீர்ப்பதற்காக கேட்டார். வேறு எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். பணத்தை ஒரு மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார். எந்த வகையில் பணம் அவருக்கு வரும் என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கடன் கொடுப்பதற்கு முன்னதாக ஒரு மாதமாக பணம்கேட்டு வந்தார். 19.05.2024 அன்று பணம் கொடுத்தேன். அதற்கு முன்பாக ஒரு மாதத்திற்கு முன்பு பணம் கேட்டார். காசோலையை எதிரிதான் நிரப்பி கொடுத்தார். காசோலை தேதி 14.06.2024. காசோலையில் உள்ள கையொப்பம் ஒரு மையாகவும் வேறு நிரப்பிய பகுதிகள் வேறு ஒரு மையாகவும் உள்ளது என்றால் தெரியாது. நான் பணத்தை ரொக்கமாக கொடுத்தேன். நான் வங்கியில் பணத்தை வைக்கவில்லை வீட்டிலிருந்து எடுத்து கொடுத்தேன். நான் பணத்தை எதிரியின் வீட்டில் வைத்து கொடுத்தேன். அவர் வீட்டிலும் அவர் வேலை செய்யும் இடத்திலும் கேட்டார். மேற்படி விவரத்தை புகார் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வங்கி கணக்கை எப்போது தொடங்கினேன் என்றால் ஞாபகம் இல்லை. எனக்குமாத வருமானம் ரூ.35,000/- எனக்கு ஒரு பெண் குழந்தை. அன்ன கொடி என்பவரை தெரியாது. எதிரி ரூ.5 இலட்சம் கடன் வாங்க தேவையில்லை என்றாலும் எதிரிக்கு என்னை தெரியாது என்றாலும் சரியல்ல. எதிரி சட்டப்படி செலுத்தவேண்டிய தொகை ஏதும் இல்லை என்றாலும் சரியல்ல. அன்ன கொடி என்பவரிடம் எதிரியின் கணவர் ரூ.50,000/- கடன் வாங்கியிருந்தார் என்றாலும் அதற்கு ஆதராவாகத்தான் எதிரியின் இந்த வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றாலும் மேற்படி தொகையை எதிரியின் கணவர் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அதில் ஏற்பட்ட வட்டி தகராறு காரணமாகத்தான் அன்னக்கொடி காசோலையை திருப்பி தரவில்லை என்றாலும் என்மூலம் காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்புஇல்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு நான் மொழிய தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு வாக்குமூலம் கொடுத்தவருக்கு எடுத்துக்காட்டி சரியென அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.02.25 13:31:57 +0530

Judicial Magistrate No.I
Dindigul.